திராவிடநாடு

மலர் 9 | 31—12—50 | இதழ் 29

இலங்கை 15 சதம்] [விலை அணா 2

காஞ்சி மாநாட்டின் தலைவாயில்

காஞ்சியில் 'கருத்துச்சோலை!'

காஞ்சி மாநாடு—வளர்ந்து வரும் நமது கழக வெற்றிக்கோர் எடுத்துக் காட்டு.

டிச, 23, 24, தேதிகள் — காஞ்சியின் வரலாற்றிலே பொன்னான நாட்கள் மட்டுமல்ல; தமிழகத்தில் பூத்துவிட்ட புதயுகத்தால் சாதிக்க முடிந்த காரியங்களைக் காட்டியவை;

நகரின் நடுவிலே 'தொட்டில்' போல அமைந்திருந்த இடமும், அங்கு நிர்மாணித்திருந்த பிரமாண்டமான அழகிய பந்தலும், அங்கு குழுமிக்கிடந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் வெள்ளமும், அவர்களை அன்போடு உபசரித்த தொண்டர்படையின் சிறப்பும் — நமது இலட்சிய வீரர்களால் முடியாதது எதுவுமில்லை, என்பதையேக் காட்டியது.

முதல் வாயலில் தளபதி அழகிரியின் கம்பீரமான தோற்றம் வரவேற்க, இரண்டாவது (தலை) வாயிலில் கழகக்கொடி யேந்தி 'விவசாயக் குடும்பத்தினர்' வீரமூச்சோடு நிற்க மாநாடு நடைபெறும் இடம் 'சிறுநகர்' போலவே காட்சி தந்தது.

மாநாட்டுப் பந்தலுக்குள் நுழையு முன், காஞ்சியில் இயக்கப்பணி புரிந்த, காலஞ்சென்ற வீரர் மு. அரங்கசாமியின் உருவப்படம் "வருக! வருக!!" என்று அழைப்பதுபோலிருந்த காட்சி, வெகு அருமை.

நகர் முழுதும், கழகக் கொடிகள் பறந்தன. இலட்சிய முழக்கங்கள் பொறிக்கப்பட்ட 'துணிகள்' தொங்கின. எங்கு பார்த்தாலும் இதே காட்சிதான்! நகரில் இருக்கும் 9-கிளைக் கழகத்தினரும் செய்திருந்த முன் ஏற்பாடுகள் வந்தோரை எல்லாம் ஆச்சரியத்தில் மூழ்கச் செய்தன!

பந்தலுக்குள்— ஆதரவாளர்களுக்கென இடம் அமைக்கப்பட்டிருந்த முறை, புதிதானது மட்டுமல்ல; போற்றத் தக்கதுங்கூட. வரவேற்பாளர், பிரதிநிதிகள், பார்வையாளர் என்று ஒழுங்கு படுத்தப்பட்டிருந்ததும், பந்தல் முழுதும் 'இயக்க மொழிகள்' தொங்கவிடப்பட்டிருந்ததும், பந்தலைச் சுற்றி ஆளவந்தார் விசித்திரங்கள் பற்றியும், ஆராய்ச்சிகளின் வளர்ச்சிகளைக் காட்டியும் தீட்டப்பட்டு மாட்டப்பட்டிருந்த சித்திரங்கள் — சிந்தனையை கொள்ளை கொண்டன.

மேடையில், கட்ட பொம்மு, வ. உ. சி, பெர்னுட்ஷா, மாஸேதுங், முதலான பல வெற்றி வீரர்களின் அழகுருவங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

செங்கற்பட்டு மாவட்ட மாநாடு— ஒரு மாகாண மாநாடு போலவே காட்சி தந்தது.

மாநாட்டில்—நமது கழகப் பிரச்சார வீரர்கள், ஒவ்வொரு தலைப்பில், நமது கழகத்தின் கொள்கைகளை முழக்கியது, ஒரு குறிப்பிடத் தக்க அம்சம்.

காஞ்சி —மாநாடு ஒரு கருத்துச் சோலை! உண்மை வீரர்களால் எதையும் 'உருவாக்கமுடியும் என்ற காட்சிச் சித்திரம்! வளர்ந்து வரும் நமது கழகத்துக்கு மக்கள் காட்டும் மதிப்பின் சின்னம்!

துர் நாற்றம் பொறுக்கவில்லை!

ஈரோடு தமிழரசு கழகக் கமிட்டி உறுப்பினரான தோழர் சி. முத்துச்சாமி, காங்கிரஸ் 'மனப்பான்மையையும், திராவிட இயக்கத் தலைவர்களை தாறுமாறாக இழித்தும் பழித்தும் பேசுவதையே, காங்கிரசும், தமிழரசுக் கழகம் என்ற பெயரால் உலவும் இரண்டொருவரும, ஒன்றிரண்டு பத்திரிகைகளும் தொழிலாகக் கொண்டுள்ளதைக் கண்டு வருந்துவதோடு, காங்கிரஸ் சம்மந்தப்பட்ட எல்லா தொடர்புகளையும் விடுத்து திராவிடர் இயக்கத்தில ஈடுபடத் துணிந்துவிட்டேன் என்று அறிவிக்கிறார்.

இந்தி ஆதிபத்யம்கூடாது

இரு டில்லி மந்திரிகள் எதிர்ப்பு

இந்தியின் 'போக்கெதை' பற்றி, இருவர், பேசியிருக்கின்றனர். இருவரும் ஏனோதானோக்கள் அல்ல! இந்திய சர்க்காரின் மந்திரிகள். கோடாக் என்ற இடத்தில் நடைபெறும் இந்தி சாகித்ய சம்மேளனத்தைத் திறந்துவைத்து ஒருவரும்—செய்தி : அனுப்பும்போது இன்னொருவருமாகத் தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவித்துள்ளனர்.

ஒருவர்—இந்தியைத் திணித்து, அதனால் ஏற்பட்ட எதிர்ப்பைக் கண்ணாரக் கண்டவர்.

இன்னொருவர்—'இந்தி ஆதிபத்யம் வளர்கிறது' என்று கூறும் அளவு முடைய சக்தியைக் கருப்புக் கொடி நாள் மூலம் கண்டவர்.

'இந்தி, பள்ளிகளில் மட்டுமின்றி பாங்கிகளிலும் உபயோகிக்கப்பட வேண்டும்! 'இந்திய சர்க்காரில் வேலை வேண்டுமானால் இந்தி அவசியம் தெரிய வேண்டும்' என்றெல்லாம், மொழி வெறியால் துள்ளித்திரியும் 'துச்சாதனப்பரம்பரை' களின் பார்வைக்கு, அவ்விருவரின் கூற்றுக்களையும் வைக்கிறோம்.

"இந்தியாவில் பல்லாயிரம் ஆண்டுகளாக பலமொழிகள் இருந்தும்-வளர்ந்தும் வருவதை நாம் நினைக்க வேண்டும். ஆகவே பலாத்காரமாக பிறமொழிகளை தள்ளிவிட்டு இந்திக்கு வெற்றியைக் கொண்ர்ந்து விட முடியும் என்பது இயலாது. கண்ணுக்கெதிரே தெரியும் இச் சரித்திரச் சான்றையே நாம் வழி காட்டியாகக் கொள்ளவேண்டும். வரம்புமுறை கெட்ட அவசரம் கூடாது.

அத்தகைய அவசரம், இந்திக்காரர்கள் ஏகாதிபத்யம் செலுத்த இந்தியின் மூலம் முயலுகிறார்கள் என்கிற கருத்தை இந்தியாவின் கீழ்ப்பகுதியிலும் (வங்கம்), தென் இந்தியாவிலும் உண்டாக்கி விடுமே என்றே நான் பயப்படுகிறேன். இது, எப்படியாயினும் தவிர்க்கப்பட வேண்டும்.

நான் வெளியிட்ட கருத்துக்கள் உங்களுக்கு விருப்பமில்லாமலிருக்கலாம். ஆனால் தெற்கில் முப்பது ஆண்டுகள் இந்திக்காகப் பணி புரிந்திருக்கிறேன். ஆகவே, மிக்க அக்கரையோடு இதைத் தெரிவிக்கிறேன்"

—சி. ஆர்.

"தென் இந்தியாவில் இருக்கும் பலர் நிஜமாக இந்தியின் ஏகாதிபத்திபத்திய ஆட்சி ஓங்குமோ எனப் பயப்படுகிறார்கள்.

இந்தியைக் கற்பதிலும் சில சங்கடங்கள் இருக்கின்றன,

தென்னிந்தியரிடம் நம்பிக்கை யேற்பட இந்திக்காரர்கள் தென்னிந்திய மொழிகளைத் தாமே கற்க முன்வரவேண்டும் தென்னிந்திய மொழிகளிலுள்ள சிலாக்கியமான இலக்கியங்களை மொழி பெயர்க்க வேண்டும்."

—திவாகர்

காஞ்சி மாநாடு—பந்தலுக்கு வெளியிலும் கூட்டம்

எதையும் தாங்கும் இதயம் வேண்டும்

அடக்குமுறை கண்டு அஞ்சாதீர்

கொடுமைக் கூடாரம் காங்கிரசாட்சி

தணலில் வெந்த தங்கம் நாம்

சி. வி. எம். அண்ணாமலை வரவேற்புரை

செங்கற்பட்டு மாவட்ட வரவேற்புக் குழுத் தலைவர் தோழர் சி. வி. எம். அண்ணாமலை ஆற்றிய சொற்பொழிவின் முக்கிய பகுதிகள்:—

மாநாட்டின் பிரதிநிதிகளாக வந்துள்ள எனது—அருமைத் தோழர்களே! தாய்மார்களே!! உங்கள் அனைவரையும், மாநாட்டின் வரவேற்புக் குழு சார்பிலே வருக! வருக! என உரிமையுடனும், உவகையுடனும், எனது வணக்கத்துடனும், உங்கள் அனைவரின் வருகையையும் அன்புடன் வரவேற்கிறேன்.

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க. மாநாட்டை காஞ்சியில் நடத்த வேண்டுமென மாநாட்டுக்குழு கடந்த ஒரு — மாதத்திற்கு முன்னர்தான் தீர்மானித்தது. இந்த குறுகிய நாட்களுக்குள் பேச்சுரிமையை நிலைநாட்ட குன்றத்தூர் வழக்கு சம்மந்தமான செலவு நிதிக்காக, அண்மையில்—பத்து நாட்களுக்கு முன் ஒரு நாடகத்தையும் நடத்தினோம். நாங்களே நடிகர்களாகவும் அதன் முக்கிய அலுவல்களை கவனிப்பவர்களாகவும் இருந்து நடத்தினோம். அதில் வந்த தொகை ரூ. 1000 பொதுச் செயலாளர் அண்ணாவிடம் கொடுத்திருக்கிறோம் இவற்றை ஏன் இங்கு குறிப்பிடுகிறேன் என்றால், மாநாட்டின் வேலைகள் முழுமையும் கவனிக்க முடியாமல் போய்விட்டது என்பதற்காகவும் நீங்களும் அறிய வேண்டுமென்பதற்காகவும்தான். ஆகையினால் தோழர்களே! இந்த மாநாட்டில் இட வசதி குறை ஏதாவது இருந்தால், அதற்கு காலக் குறைவுதான் காரணம் என்பதை நீங்கள் அறிய வேண்டுகிறேன்.

இன்றைய ஆட்சியாளர்கள் நம்மையும் நம் இயக்கத்தையும் எப்படியாவது ஒழித்துக் கட்டியாகவேண்டுமென தீர்மானித்து விட்டார்கள். அதன் முதல் துவக்க விழாவாகத்தான், தடியடி தர்பார், துப்பாக்

கிப் பிரயோகம், பேச்சுரிமை பறிப்பது, எழுத்துரிமை பறிப்பது, கூட்டங்களுக்குத் தடை விதிப்பது போன்ற காரியங்களாகும். குன்றத்தூரிலே 'திராவிடநாடு திராவிடருக்கே!, என்று நமது இயக்க இலட்சிய ஒலியை எழுப்பி—நமது முன்னணி வீரர்களை எல்லாம் விரட்டியடித்து, துப்பாக்கி கொண்டு சுட்டு தொல்லை கொடுத்தது போதாதென்று ஜவுளி வாணிபத்திற்காகச் சென்ற தோழர்களையெல்லாம் கலாட்டா செய்தார்கள் என்று ஒரு பொய்யான சோடனைச் செய்து 332, 188, 148, செக்ஷன் படி கைது செய்து 'ரயிடிங்கேசும்' போட்டிருக்கிறார்கள்.

எப்படியாவது கொள்ளை, கொலை சம்மந்தமானக் குற்றச் சாட்டுகளை, நமது இயக்கத் தோழர்களின் மீது சுமத்தி அதையே,—அதாவது இவர்கள் கற்பனை செய்கிற கொள்ளை, கொலை கேசுகளை வைத்துக் கொண்டே நமது இயக்கத்தை சட்ட விரோதமாக்கிவிடலாம் என்று இவர்கள் கருதுகிறார்கள்!

இனிமேல்தான் மிக எச்சரிக்கையாக இருக்கவேண்டும் கட்டுப்பாடு என்ற கேடயத்தையும், ஒழுக்கம், ஒற்றுமை, கொள்கை உணர்ச்சி என்ற ஆயுதங்களால்தான் இவற்றை தடுக்கமுடியும். இன்றைய ஆட்சியாளர்களுக்கு, தப்பு செய்தவன்தான் தண்டிக்கப் படவேண்டும் என்ற கொள்கை கிடையாது. அவர்களின் கண்களுக்கு மாறுபட்டவர்களாக யார் யார் தெரிகிறார்களோ அவர்கள் எல்லோருமேதான் தண்டிக்கப்படுவார்கள். உதாரணமாக, திருச்சி — மாவட்டம், தென் ஆற்காடு மாவட்டம் ஆகிய ஊர்களிலே நமது இயக்கத் தோழர்களை, காங்கிரசிலே உள்ள சில காலிகள், இரவில் வெளியூர்களுக்குச் சென்று கழகப் பிரச்சாரம் செய்துவிட்டு வந்து கொண்டிருந்த தோழர்களையெல்லாம் வழிமடக்கி, அரிவாள்கொண்டு வெட்டி, தடிகொண்டு தாக்கியிருக்கிறார்கள்! அவர்கள்மேல் அந்த மாவட்ட போலீசார் கேஸ் போட்டார்கள்; ஆனால் கேஸ் நடைபெறவில்லை. நாம் மிகமிக நல்லவர் என்று கருதிக்கொண்டிருக்கிறோமே 'ஓமந்தூர் இராசாமிரெட்டியார் அவர் பிரதமராக இருந்த காலந்தான் அது. உடனே போட்ட வழக்கை வாபஸ் செய்து கொள்ளும்படி, போலீசாருக்கு அமைச்சரிடமிருந்து தாக்கீது வரவே 'வழக்கு வாபஸ்' வாங்கப்பட்டு விட்டது.

உண்மையாகவே சொல்லுகிறேன் தோழர்களே இவ்வளவு பிற்போக்கானவர் ஆட்சியிலே நாம் இருக்கிறோம் என்று எண்ணுகிற போது மனிதாபிமானமுள்ள உள்ளம் அடையும் வேதனையை அளவிடற்பாலது என்றே சொல்லவேண்டும்.

கொடுமையும் மடமையும்நிறைந்த ஆட்சி! இவர்கள் ஆட்சி மதச்சார்பற்ற ஆட்சியாம்! கிருஷ்ணஜெயந்தி ஸ்ரீராமநவமி, தீபாவளி, ஆவணி அவிட்டம், பிள்ளையார் சதுர்த்தி, காமன் பண்டிகை—அதிலே நாடாளும் மந்திரிகள் பங்கு கொள்வது! இத்தகைய ஆட்சிக்குத்தான் பெயர் மதச்சார்பற்ற சர்க்கார் ஆட்சியாம்! இதற்கு ஆசியாவின் ஜோதி ஜவகர்லால் விஜயம் செய்வது, இத்தகைய தவறுகளை ஒரு சாதாரண மாடு மேய்க்கும் சிறுவன் கூட செய்வதற்கு அஞ்சுவான் அந்தக் காரியத்தை நாடாளும் அமைச்சரா செய்வது? இது இன்றைய ஆட்சியின் நிலை!

நமக்கு நாட்டிலே ஆட்சி புரியும் ஆட்சியாளரின் எதிர்ப்பு! ஆரிய மாயையால் உழலும் வைதீகர்களின் எதிர்ப்பு! சமயவாதிகளின் கலகலப்பு! ஜாதிய ஆஷாட பூபதிகளின் — எதிர்ப்பு! உல்லாச வாழ்வு வாழும் பணமூட்டைகளின் எதிர்ப்பு! பதவி விரும்பிகள் எதிர்ப்பு! மற்ற பிற எத்தனையோ எதிர்ப்புகள் நமக்கு நாட்டின் நாலா பக்கமும் இருந்தது ஒரு காலத்தில்! ஏன்? இன்னும் கூட இருக்கிறது!! — அப்படி இருந்தும், இந்த நாட்டில் எந்த அரசியல் கட்சியும் பெறாத பெரும் பலத்தை பெற்று நாம் வளர்ந்து வருகிறோம். இவற்றிற்கெல்லாம் காரணம் நமது கொள்கையின் அடிப்படைத் தத்துவமும், நமது தோழர்களின் இடைவிடாத உழைப்பும் என்பதை நான் சொல்லாமலேயே நீங்கள் நன்கு உணர்வீர்கள்.

தோழர்களே! நமது மாகாணத்திலே இருக்கிற தொழிற் கட்சிகள்—அதாவது சோஷலிஸ்டுகள், கம்யூனிஸ்டுகள் என்பவைகள், நாம் எந்த அடிப்படையில் 'திராவிட நாடு' கேட்கிறோம் என்பதையே அறிந்து கொள்ளவில்லை. நமது திட்டம் நிறைவேறி, நமது நாடு நம் கைக்கு வந்தால், இந்த நாட்டிலே, தொழிலாளி—முதலாளி; ஏழை — பணக்காரன்; பார்ப்பனன்—பறையன் இருக்கமாட்டான் என்று பலமேடைகளிலே நமது இயக்கமும் முன்னாள் தலைவர் பெரியார் முதல் இன்றைய பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் வரை நல்ல விளக்கத்தை நாடு அறிய இந்நாட்டின் பட்டி—தொட்டிகள், மூலை—முடுக்குகள் வரை பல ஆயிர மக்கள் கூடி இருக்கிற கூட்டங்களில் எல்லாம் சொல்லிவந்தார்கள்! சொல்லி வருகிறார்கள்! இனி சொல்லியும் வருவோம்!!!

தொழிலாளர்கள் நிலையோ சொல்லிமுடியாது. ஆலைத்தொழிலாளர்கள் படும் தொல்லையைவிட கைநெசவுத் தொழிலாளர்நிலையைப் பற்றி எண்ணுகிறபோது நமது இதயம் துடிக்கிறது. இன்றைய ஆட்சியாளர்கள் அவர்களுக்குக்காக கொடுக்கும் நூல் மாதம் ஒன்றுக்குச் சராசரி நான்கு நாட்களுக்குக் கூடபோதுமான அளவில் கொடுக்காமல் வருந்துகிறார்கள். இவர்கள் நிலை இப்படியே நீடிக்குமானால்,இந்தநாட்டிலே அமைதியைக் காண முடியுமா? என்று நமது காருண்யமிக்க, காந்தி பக்தர்களும், அவர்களின் அரசாங்கமும், யோசிக்க வேண்டுகின்றேன். அவற்றோடு நமது கழகமும், நமது கைநெசவுத் தோழர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு இம் மாநாட்டில் வழி வகுக்க வேண்டுமென வேண்டிக்கொள்கிறேன்.

இன்று கூடியுள்ள இம்மாவட்ட மாநாடு, மு. அரங்கசாமி அவர்கள் பந்தலில் நடைபெறுகிறது. திரு. அரங்கசாமி அவர்கள், காஞ்சி பெற்று தந்த பெருவீரர், எதற்கும் அஞ்சாத் தீரர் — எதிர்ப்புகளைக் கண்டு நகையாடும் துணிவு மிக்க போர் மறவர்—அவரைப் போன்ற ஆயிரமாயிரம் வீரர்கள் கூடியுள்ளனர். இவர்களால் முடியாதது எதுவுமில்லை. ஆகவே, நாம் பெறுவோம் திராவிடம், அதில் சந்தேகமில்லை.

பிறகு கூடியிருந்த தோழர்களையெல்லாம் மறுமுறையும் வரவேற்று தன் உரையை முடித்தார்.

திருச்சி மாவட்ட தி. மு. க. செயற்குழு

3—12—50ல் திருச்சி என். எஸ். பங்களாவில், மாவட்ட செயற்குழு தோழர் பராங்குசம், தலைமையில் கூடியது. பல கிளைக்கழக பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். 23—9-50ல் கூடிய மத்திய செயற்குழு செய்த தீர்மானங்களை ஆதரித்தும், மாவட்டத்தில் தடைவிதிக்கப்பட்ட நாடகங்களை நடத்துவதெனவும், சென்னை குன்றத்தூர் கொடுமைகளை கண்டித்தும், நாரணமங்கலம் 144 தடையை மீறிய வீரர்கள் எழுவரையும் பாராட்டியும், மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கவும், தோழர்கள் ஆசைத்தம்பி, கலியபெருமாள், தங்கவேலு ஆகியோரை மொட்டையடித்ததை, சர்க்கார் இல்லையென்று கூறுவதைக் கண்டித்தும், ஜனவரியில் திருச்சிக்கு வர இருக்கும் இராசகோபாலாச்சாரியாருக்குக் கருப்புக் கொடி பிடிப்பதெனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பொங்கல் மலர்

இன்பப்பாசறை வெளியீடு

பேராசிரியர், ச. சோமசுந்தர பாரதியார், முன்னாள் அமைச்சர் டி. எஸ். அவினாசிலிங்கனார், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், "தமிழர் நாடு" ஆசிரியர் கி. ஆ. பெ. விசுவநாதம், அறிஞர் சி. என் அண்ணாதுரை, சி. பி. சிற்றரசு, திருமதி சொற்செல்வி இளமுருகு, ஆகியோர் உள்பட தமிழகத்தின் பிரபல எழுத்தாளர்கள், தமிழ்ப்பேரறிஞர்கள், அரசியல் மேதைகள், படஉலகச்சிற்பிகள், பாவாணர்கள் பலரது அழகிய எழுத்தோவியங்கள், மலரை அலங்கரிக்கின்றன.

பதிப்பாசிரியர்; எம். அய்யாசாமி.

தேவைக்கும் விவரத்திற்கும்,

இன்பப்பாசறை,

(Ad) 69, டவுன்ஹால் ரோடு, மதுரை.

"பரிசு"

(ம. நிழலன்)

தீட்டியது.

முத்தமிழன் பதிப்பகம்,

(A) சென்னை.

பல்லவர் தலைநகரிலே கூடினர்

புரட்சி முரசு கொட்டினர்

காஞ்சி காணாத காட்சி

அறிவுத் தென்றல்! ஆர்வப் புயல்!!

செங்கற்பட்டு மாவட்ட நிகழ்ச்சிகள்

இது நம் நாடு—இதனை நாம் அடைவது, ஆள்வது நமது பிறப்புரிமை—இதை எவரும் மறுக்கமுடியாது, மறுக்கக்கூடாது.

—அறிஞர் அண்ணாதுரை.

பெண்களின் நிலை தாழ்ந்திருக்கிறது என்பது உண்மை. இந்தத் தாழ்விற்கு ஆண்கள்தான் அதிகக் காரணம் என்பதை மட்டும் யாரும் மறுக்க முடியாது. முன்னேற்றப் பாதையில் ஆணும், பெண்ணும் இணைந்து சென்றால்தான் இலட்சிய பூமியை விரைவில் அடைய முடியும். ஆகவேதான் ஆண்களை குறைகூற வேண்டியுள்ளது. பெண்குலம் இன்று விழித்துக்கொண்டது. இனி முன்னேற்றம்தான்!

—இராமாமிர்தத்தம்மையார்.

ஆம், சரித்திரத்திலே நாம் நாடாண்ட பரம்பரையினர், மன்னர்கள்! ஆனால், இன்று நாம், கூலிகள், பர்மா, ரப்பர் காடுகளிலே, இலங்கைத் தேயிலைத் தோட்டங்களிலே! காஞ்சியின் பெருமை விரிந்தது. புலிகேசி படையுடன் இங்கு வந்தான்—ஆனால் ஓடினான், வெருண்டு—இங்கிருந்து சென்ற பரஞ்சோதி வாதாபி கொண்டான். அத்தகைய வீரத்தின் விளைநிலம் காஞ்சி. அங்கு, திராவிட இனத்தின் எதிர்காலம் உருவாக்கப் படக் கூடியுள்ளோம்.

—ஏ. கே. வேலன்.

இலக்கியங்களிலே, நாம் காண்கிறோம்—பல பல பாடல்கள் நம்மைக் காட்டிலும், தீவிரமாக, ஆத்திரமாக நாட்டிலே பரவிக் கிடக்கும் மௌடீகங்களைச் சுட்டெரிக்க வேண்டுமென்று கூறுகின்றன. கவி காளமேகம், சிவவாக்கியர், சித்தர்கள், இரட்டைப் புலவர்கள், பாரதியார்—இப்படி ஒவ்வொருவர் பாடலையும் எடுத்துக்கொண்டாலும், மூடக்கொள்கைகளைத் தாக்கியிருக்கின்றனர். கடவுள் பெயரால் நடைபெறும் அக்கிரமங்களை, அநீதிகளைக் கேலியாகவும், கிண்டலாகவும் கண்டித்துள்ளனர்.

—கண்ணதாசன்.

இலங்கை மிகச் சிறிய நாடு—அதுவும் இந்தியாவுடன் ஒப்பிடும் பொழுது, நம் வருணனைக்கு அப்பாற்பட்ட மிகச் சிறிய நாடு. மூலப் பொருள்கள் பலவற்றை அனுப்புகிறது—வேண்டிய பிற பொருள்களைப் பெறுகிறது. ஆனால் இந்தியாவிலிருந்து மூலப் பொருள்கள் போகின்றன. எனினும் பிற பொருள்கள் வருவதில்லை, ஆட்சியிலே அமர்ந்துள்ளோருக்கு மூளை பலம் இல்லாத காரணத்தால்! அதனால் நம்மை பசியால் தவிக்க விட்டுவிட்டார்கள். பட்டினிச் சாவுகள் மலிந்துவிட்டன. இது விவசாயக் கோளாறால் மட்டுமல்ல, விவரமறியாத வீணர்கள் கையிலே நாடு சிக்கிவிட்டதாலும்—என்பதை மட்டும் மறுக்க முடியாது.

—என். எஸ். இளங்கோ.

இந்திய அரசியல் திட்டத்தை அழிக்காமல் விடோம் மாற்றிடுவோம் என்ற முழக்கம் எழத்தான் போகிறது. இந்த அரசியல் திட்டம் அழிந்து போகத்தான் போகிறது காவேரிக்கரையில் ஓர் நாள், திராவிடரின் அரசியல் நிர்ணய சபை கூடப் போகிறது. அந்த நாளே, நமக்கு விடுதலைத் திருநாள்.

—கே. ஏ. மதியழகன், பி. ஏ.,

கூண்டிலே சிக்கிய கிளி, வலையிலே மாட்டிய மான், தூண்டிலில் அகப்பட்ட மீன்—போரிட முயற்சி செய்யும்—அவைகளும் விடுதலைப் போராட்டம்தான். மனிதனும் அப்படியே, தன்மீதுள்ள கட்டுகளை அறுத்தெறிந்திடத் துடிக்கின்றான். விடுதலைப் போர் விளையாட்டுப் பேச்சல்ல, சாதாரண சரித்திரக் குறிப்பல்ல—பயங்கரமானது. விடுதலைப் போர்களில் உயிர் விட்டோர் எத்தனையோ பேர்! பலிபீடங்களை, தங்கள் பச்சை இரத்தத்தால் நனைத்த கர்மவீரர்கள் ஆயிரமாயிரம்! தங்கள் எலும்புகளை பேனாவாக்கி, கொட்டும் குருதியை மையாக்கி, மண்டையோடுகளை காகிதமாக்கி விடுதலை சாசனங்கள் எழுதித் தந்தோரே, இன்று நம் நினைவிலுள்ளோர்! அத்தகைய போர் திராவிடம் பெற தேவைப்படினும் தயங்கோம்.

—மு. கருணாநிதி.

மண்ணுக்கடியிலே பொன், நிலக்கரி, இரும்பு, இன்னும், மனித தேவைகளைத் திருப்திப்படுத்தும் பல பொருள்கள் புதைந்து கிடக்கின்றன. இவைகளை வெளியில் கொண்டுவந்து தருபவன் தொழிலாளி அவன் உழைப்பிலேதான் உலகம் நிலைத்திருக்கிறது. மனிதனது உழைப்பைப் பயன்படுத்தி உருவாக்கப்படுவதே தொழில். அத்தொழிலும் பல துறைகளிலேயும் பரவியிருக்கிறது. ஆரம்ப காலத்தில் தனியுடைமை தத்துவம் இல்லை. ஆகவே உழைப்பவன் வாழவும், உழையாதவர்கள், உழைப்பவர்களின் கருணையினால் உயிர் பிழைக்கவுமான நிலையிருந்தது.

—காஞ்சி. கல்யாணசுந்தரம்.

கடவுளைப் பற்றிய கவலைப்படாத நாட்டில், கடவுளுக்கு மதிப்பு தராத ரஷ்யாவில் 93% படித்தவர்கள். ஆனால், சிவனும், மாலும், பிரம்மாவும் வாழ்கின்ற பூமியில், மன்னார், பெரியபுருடர், அட்ட திக்கு பாலகர்கள், தேவாதி தேவர்கள், மகான்கள், ஜீபர்கள் நிறைந்த புண்ணிய பூமியிலே 11.8% படித்தவர்கள். அதுவும் அரைகுறை படிப்பாளிகளை யெல்லாம் சேர்த்துத்தான் இந்தக் கணக்கு—இதனைக் காணும் பொழுது கண்ணீர் சொரிய வேண்டியிருக்கிறது. இன்று ஆளும் காங்கிரசாட்சியினர் கல்வித் திட்டம், நினைத்த நேரத்திலெல்லாம் மாறுகிறது. ஒரு ஒழுங்கு முறை, வரையறை எதுவுமின்றி கல்வித் திட்டம் நடத்தப் படுகிறது.

—இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.,

மதத்தை நாம் எதிர்க்கக் காரணம் கண்கூடு—உலக உத்தமர் காந்தியாரைச் சுட்டுக் கொன்றது எவ்வளவு கொடுமைக்குரிய செயல்—மதத் தந்த வெறியால், ஒரு மதோன்மத்தன் செய்த பயங்கர வேலை. மதவெறி ஒழிய வேண்டுமென்பது தான் மது குறிக்கோள். அதற்காகவே, சமுதாய முன்னேற்றத் திட்டங்களில் மதமாசுகளை விளக்கிட நாம் பின் தங்குவதில்லை. இவ்வுலகம் மாயை என்று கூறுவது, ஏழைகளிடம்! கோயிலைக் கட்டு, கும்பாபிஷேகம் செய் என்று கட்டளையிடுவது, பணக்காரரிடம்! ஆகவே எத்தர்கள் பிழைக்க வழி வகுத்தது மதம். மதச் சார்பற்ற சர்க்கார் என்கிறது வெறும் பித்தலாட்டமே! ஏனெனில், இந்திய சர்க்கார், இந்து மதக் காவலர்களாக உலவுகிறார்கள்.

—என். வி. நடராசன்.

வடநாடு, சதி செய்கிறது என்று துணிந்து கூறலாம், தென்னாட்டிற்கு நூல் தராது, இங்குள்ள நெசவாளி மக்களை மாள வைப்பதின் நோக்கம், வடநாட்டு மில் துணிக்கு, தென்னாட்டில் அதிக மதிப்பையும், மார்க்கட்டையும் ஏற்படுத்திட முயற்சி எடுக்கப்படுகிறது. அதற்காகவே, வடநாடு ஒரு பெரிய சதித் திட்டமே போட்டு வேலை செய்கிறது. இதற்கு தென்னாட்டு சர்க்கார் உடந்தையாக இருப்பது ஒரு பெரிய தொழிலாளி சமூகத்திற்கு செய்யப்படுகிற துரோகம் மட்டுமல்ல, இந்நாட்டை வஞ்சகர்களுக்குக் காட்டிக் கொடுப்பது போலாகும்!

—சேலம் ஏ. சித்தையன்.

ஏறத்தாழ மூன்றாண்டுகள் காங்கிரசாட்சி நடந்து வருகிறது. நாமோ, இரட்டையாட்சியில் சிக்கியிருக்கிறோம். 'டெல்லி'யும் கட்டளையிடுகிறது. சென்னையும் நம்மை அடக்கிடப் படாதபாடுபடுகிறது. ஆனால் இம் மூன்றாண்டு காலத்தில் நாம் அடைந்த வசதிகள் என்ன? உரிமைகள் என்னென்ன என்று பார்த்தால், எதுமில்லை பராபரமே என்று தான் கூற வேண்டும். வெள்ளைக்காரர்கள் காலத்திலே அனுபவித்தவைகளைவிட அளவிலே குறைவுதான். எந்த இலாக்காவை எடுத்துக்கொண்டாலும், நாம் அனுபவிப்பவை கொடுமைகளே தவிர, வேறெதுவுமில்லை.

—ஈ. வே. கி. சம்பத்.

ஒரு பயிர் மிகச் செழிப்பாக, சீக்கிரமாக வளர்கிற தென்றால், அதற்குக் காரணம் போடப்படுகிற எருக்கள்தான். அதுபோலத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் மிக சீக்கிரமாக வளர்ந்துவிட்டதென்றால், அதற்கு நாம் போட்ட இராசாயன எருக்கள்தான்.

—சத்தியவாணி முத்தம்மையார்.

செங்கற்பட்டு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநாடு டிசம்பர் 23, 24, தேதிகளில் காஞ்சியில் தர்கா மைதானத்தில் அமைக்கப் பட்டிருந்த மு. அரங்கசாமிபந்தலில் வெகு சிறப்பாக நடந்தது.

ஆயிரக்கணக்கான மக்கள், மாவட்டத்தின் பலபகுதிகளிருந்தும்முதல் நாள் இரவே குழுமிவிட்டனர். இன்னும் தமிழ்நாட்டின் எல்லா மாவட்டத்தைச்சேர்ந்த முன்னணி வீரர்களும் வந்திருந்தனர்.

டிச 23.

இன்று காலை 9-30 மணிக்கு மாநாடு தொடங்கியது. தோழர்கள் காவே. முருகேசன், சேலம்குகை கே-பி- வரதராசன், சம்பத்குமார், லிங்கதாசன் ஆகியோர் இன்னிசை விருந்தளித்தனர்.

மாநாட்டுத் தலைவர், தோழர் சி-பி. சிற்றரசு, மாநாட்டுப் பந்தலுக்குள் நுழையுமுன் கழகக் கொடியை ஏற்றுவித்தார்.

பிறகு சென்னைத்தோழர் கே.ஆர். செல்லமுத்து, பாடினார். அடுத்து தோழர் மகாலிங்கம் திராவிடப்பண் பாட மாநாடு தொடங்கிற்று.

தோழர் ஏ-வி-பி. ஆசைத்தம்பி, துவக்கவுரையாற்ற, தோழர் சி. வி. எம். அண்ணாமலை, எல்லோரையும் வரவேற்றார். தலைவரைமுன்மொழிந்தார்.

தோழர்கள் என்-வி. நடராசன், பேளுக்குறிச்சி சோமசுந்தரம், மு. கருணாநிதி, பராங்குசம், கே. கோவிந்தசாமி, வெ. சம்பந்தன், காஞ்சி. கல்யாணசுந்தரம், டாக்டர் தர்மாம்பாள் அம்மையார், இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. ஆகியோர் வழிமொழிந்தனர் தோழர் சி-பி. சிற்றரசு தலைமை யேற்றார்.

இத்துடன் மாநாட்டின் காலை நிகழ்ச்சி முடிவடைந்தது.

மாலை நிகழ்ச்சியில் தோழர்கள் சம்பத்குமார், கே-ஆர்-செல்லமுத்து பாடினர். பிறகு தலைவர் சிற்றரசு, தலைமையுரையை நிகழ்த்தினார்.

பிறகு நாகூர் அனீபா, எம். எம். மாரியப்பா, ஆகியோரின் இன்னிசை விருந்துகள், ஒன்றின்பின் ஒன்றாக தொடர்ந்து நடந்தன.

இரவு தோழர் கே. ஆர். இராமசாமி, சி. என். ஏ. மற்றும் பலரும் நடிக்கும் "சந்திரமோகன்" நாடகம் நடந்தது.

டிச 24.

காலையிலிருந்து பல பொருள்கள் பற்றி தோழர்கள் கா. அப்பாதுரை, எம். ஏ., எல். டி., இராமாமிர்தத்தம்மையார், ஏ. கே. வேலன், கவிஞர் கண்ணதாசன், என்.எஸ். இளங்கோ, கே. ஏ. மதியழகன், பி. ஏ., மு. கருணாநிதி, காஞ்சி. கல்யாணசுந்தரம், இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., பேசினர். இத்துடன் காலை நிகழ்ச்சி முடிவடைந்தது.

மாலையில் மீண்டும் தோழர்கள் என். வி. நடராசன், சேலம் சித்தையன், ஈ. வே. கி. சம்பத், தோழியர் சத்தியவாணி முத்தம்மையார் பேசினர்.

தலைவர் அவர்களால் தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

இறுதியில், பொதுச்செயலாளர் அண்ணாதுரை கட்சியின் வளர்ச்சி குறித்துப் பேசினார். வரவேற்புக் குழுத் தலைவர் சி. வி. எம். அண்ணாமலை நன்றி கூறினார்.

பிறகு காஞ்சி. புண்ணியகோட்டி குழுவினர் இன்னிசையாற்று நடந்தது. தோழர்கள் அனீபா, கே. ஆர். செல்லமுத்து பாடினர். பொ[illegible] பேட்டை மாணவர் இருவர் [illegible]னர்.

இரவு, தோழர் சி. என். ஏ., மற்றும் பலர் பங்குகொள்ளும் '[illegible] தேவன் மயக்கம்' நாடகம் நடந்[illegible]

—X—

திராவிட நாடு
ஞாயிறு] 31-12—50 [காஞ்சி

நாம்

கடுஞ் சினம்! காரசாரமான வார்த்தைகள்! கடுமையான தாக்குதல், குண்டுமாரி! 'தூல்வலையைப் பிடித்தழுத்தும் கொடூரச் செயல்'கள்! விபத்துக்கள்—வேதனைகள்—விசித்திரங்கள்!—எதுவும், அசைக்கவில்லை, நம்மை.

வேதனையோடு உலவப் புறப்பட்டோம், விஷத்தோடு விளையாடுகிறோம் 'என்றனர், விஷமத்தனம் என்றும் சொல்லினர், 'விலா நோகச் சிரிக்கலாம் வேளை வந்துகொண்டேயிருக்கிறது' என்று ஆரூடம் கணித்தனர், 'வாலை நறுக்கிட வேளை பார்த்திருக்கிறேன்' என்று கேலி பேசினர்' 'விஷயமறியாததுகள்—வேகத்தில் கிளம்பியவர்கள்' என்று கூடப் பேசினர் — எல்லாவற்றையும் தாண்டிவிட்டோம்.

நிலவு தேய்வதுண்டு—குளிர்க் கொள்கை பரப்பும் நாம் வளர்ந்து கொண்டேயிருக்கிறோம்.

தென்றலுக்குக் கூட ஓய்வுண்டு—ஆனால் நமக்கோ ஓய்வு என்பதே கிடையாது.

ஓயாத தென்றல், நிற்காத அம்பு, வற்றாத அருவி, ஆடாத விருட்சம், காயாத கடல-நாம்.

நமது பணி நடைபெறாத நாளில்லை. திக்கெட்டும், தினசரி நமது குரல் ஒலிக்கிறது. தேன்தமிழ் முரசொலிக்க, திராவிட கீதம் இசைக்க, திண்தோள் வீரர்கள் பவனி வர, பெருமிதமும் பூரிப்பும் நம்மைச் சுற்றி பவனி வந்து கொண்டேயிருக்கின்றன.

இந்தச் சுவையான காட்சி இலேசானதல்ல—இலகுவானதும் அல்ல.

ஆனாலும் நாம் அடைந்துவிட்டோம்.

'மாடமாளிகைகள்' சாதிக்க முடியாததை 'மண்குடிசைகள்' பெற்றுவிட்டன! 'ராஜபூபதி'கள் காணாததை 'ராஜப உலவி'கள் பெற்றுவிட்டோம்!

நாம் 'ஜரிகைக் குல்லாய்'கள் அல்ல; நம்மருகே ஜமீனும் மிட்டாவும் கிடையாது. பணபலம் அற்றோர் நாம்—ஆனாலும் வளர்ந்து நிற்கிறோம்.

பிரச்சாரப் பீரங்கிகள் ஒருபுறம் முழக்க, காகிதக் கோட்டைகள் மற்றோர் புறம் கர்ஜிக்க, 'கண்மூடினால் போதும்—காலை வாரிவிடலாம்' என 'காருண்ய' சர்க்கார் காத்துக் கிடக்க—எல்லாவற்றையும் தாண்டி, இருக்கும் ஒன்றிரண்டு பத்திரிகைகளோடு, உலவுகிறோம் — அதுவும் சாதாரணமாக அல்ல; பெருமிதத்தோடு! பிறர் திகைக்கும்படியாக!

ஓராண்டுக் காலத்தில் நாம் சாதித்திருக்கும் காரியங்கள் சாமான்யமானவையல்ல; சகலராலும் முடியக்கூடியவையுமல்ல.

சனாதனச் சர்ப்பங்கள் ஒரு புறம் சீறவும், சந்தர்ப்பம் எதிர்பார்த்து சர்க்கார் பாயவும், கழுகுப் பார்வையோடு எதிரிகள் வட்டமிடவும், இடுக்கித் தாக்குதல்கள் நம்மை எப்போதும் தாக்கவும் — வேதனைப் புயல்கள் நம்மீது வீசிக்கொண்டேயிருந்தும் நமது விவேகப் பாதை வளையவில்லை; நெளியவில்லை!

மக்கள் மன்றம் தாலாட்ட, திராவிடப் பூமியின் திருமடியிலே, தினசரி பணிபுரிந்து கொண்டிருக்கிறோம்.

நமது சேவை வீண்போகவில்லை—விளைவு பெருமிதமாகயிருக்கிறது.

நாம், பொது வாழ்வுப பாதையில் போக போக்கியங்களை எதிர்பார்த்தோரல்ல! பொங்கி வரும் ஆபத்துக்கள், பொசுக்கிவிடும் சினக் காற்றுகள், உறவினர் பொல்லாப்பு, உற்றோர் கிலேசம், ஆகியவைகளைத் தாங்கியே புறப்பட்டோம்!

காடாகயிருக்கும் நாட்டை, நச்சரவக் கொள்கைகளிலிருந்து மீட்க நாம் தொட்ட பாதை—காடு முரடானது மட்டுமல்ல -- கஷ்டங்களை கணப்பொழுதும் தவறாது வீசும் பாதை! இருந்தும், நாம் கலங்கவில்லை!

நாம் வாலிபர்கள்—வசந்த காலத்தின் வாயிலிலே நிற்பவர்கள். எனினும் நமது வாழ்க்கையைப் பொதுப் பணிக்குச் சமர்ப்பித்து விட்டோம். வாழ்ந்து கெட்ட ஒரு மாபெரும் சமுதாயத்தின் விடுதலைப் பட்டாளத்தின் முன்னேறும் வீரர்களாகி விட்டோம்!

நமது சேவைகண்டு—சினந்தோர், அணைக்கிறார்கள். சீறினோர்—பூரிக்கிறார்கள். கேலிசெய்தோர் 'கிட்ட வா!' என்று, அன்போடு அழைக்கிறார்கள்.

இந்த நிலை நமக்குப் பூரிப்பைத் தருவது மட்டுமல்ல — புதுப் பொறுப்புகளையும் தருகிறது. 'போதாது உனது பணி. உனது சேவை அதிகமாக வேண்டும். கஷ்டங்களைப் புன்சிரிப்போடு தாங்கும் சக்தி வளரவேண்டும்' என்று போதிக்கிறது.

பொதுச்சேவை — வீணையொலியல்ல, வேதனைப்புயல். அதிலும்சாக்கடை நாற்றம் நிரம்பிய ஒரு சமுதாயத்துக்காகப் பணியாற்றுவதென்பது சாமான்யமானதல்ல. சினம் என்ற காற்று சீற, பணபலம் என்ற 'படை'மோத பத்திரிகைப்பீரங்கிகள் பாய, சர்க்கார் என்ற 'சக்கரம்' சுழன்று தாக்க. இத்தனையையும் எதிர்பார்த்துக்கொண்டே, நாம் நடந்துசெல்கிறோம்.

இலட்சியக்கோட்டையை அடைவதற்குமுன், நாம் ஓடவிடவேண்டிய 'இரத்த ஆறு' கொஞ்சமாக இருக்காது. ஒடியப்போகும் எலும்புகள், உடைந்து உருக்குலையப்போகும் உருவங்கள் எண்ணிறந்தவையாகவேயிருக்கும்.

சிறை, தடியடி, குண்டுமாறி — இவைகளை எதிர்பார்த்தே நாம் நடக்கிறோம். நம்மை'எதிரிகள்என்று கருதுவோர்' எத்தகைய கொடூரப் புலிகள் என்பதை நாம் அறியாமலில்லை நமது வளர்ச்சிக்காண அவர்கள் இதயத்தில் எழும்ஆத்திரத்தை நாம் அறிந்தவர்கள்தான். ஆனாலும், அட்டகாசத்தோடு நம்மைத்தாக்கினும், புன்சிரிப்பையே நாம் பதிலாகத்தருகிறோம். துப்பாக்கியைக்காட்டினும்—நாம் துவளவில்லை. குண்டுமாறி கொட்டினும்—நெஞ்சைத் திறந்துகொண்டே செல்கிறோம். எதையும் தாங்கும் இதயம்நம்மிடை வளர்ந்துவிட்டது.

★

நமது இலட்சியம் கானல், நீரல்ல; விஞைசைகொண்டு வெறிகொண்டு அலைவோரும் நாமல்ல.

நமது பாதை விவேகப்பாதை — விடுதலை விரும்பிகள் நடந்துசென்ற பாதை.

நாம்—நியாயத்தின் பிம்பங்கள் நேர்மையின் சின்னங்கள்.

கண்ணியம் என்ற வாளும் கட்டுப்பாடு என்ற கேடயமும் நமதுகைகளிலே இடம் பெற்றிருக்கின்றன.

சுயநல வேட்டையும், சூதுச்செயலும் நமக்குப்பிடிக்காதவைகள்.

இலட்சிய வீரர்கள் என்ற பட்டந்தாங்கி பணிபுரியும் நமக்கு ஏற்படும் ஆதரவு-அகத்தில் மகிழ்ச்சியையும், நெஞ்சில் பொறுப்புச் சுமைகளையும் தருகிறது.

மக்கள் மன்றத்தில் நமக்கேற்பட்டிருக்கும் வளர்ச்சி, நமது தியாக இதயத்தை இன்னும் பெரிதாக்குகிறது. நமது கடமைப் பாதையைப் பெரிதாக்கிக் கொண்டேயிருக்கிறது.

புது ஆண்டு பூத்து விட்டது. உலகச் சூழ்நிலைகளையும், நமதுஎதிர்காலத்தையும் எண்ணும் போது, நமதுகடமைகள் பெருகிக்கொண்டே போவது கண்ணுக்கு முன்னர் தெரிகிறது.

உலகம் போர்ப்புயலில் சிக்குமோ என்ற பயத்தையும், கேடும்பஞ்சமும் நமது நாட்டை பாதிக்குமோஎன்ற சஞ்சலத்தையும், வடநாட்டு ஆதிபத்யம் கொடுமைகளால் நம்மைத் தாக்குமோ என்ற சந்தேகத்தையும், ஏந்திக்கொண்டு 1951 மலர்ந்திருக்கிறது.

1951 காட்டும்பாதை-நமக்குள்ள கடமைகள் எவ்வளவு பெரியவை என்பதைச் சொல்கிறது.

கடமைகள் வளர்வது-நமது காரிய மாற்றும் சக்தியைப்பலப்படுத்தும்.

அந்தச் சக்தியைத் தாங்கி-இலட்சியபுரி நோக்கி விரைந்து செல்லும் வேகமும் விவேகமும் நமக்குண்டு. அதைத் துணையாகக் கொண்டு நடந்து கொண்டேயிருப்போம்!

பித்தலாட்டம்

15—12—50 அன்று கண்டவராயன்பட்டியில் நடைபெற்ற தி.மு.க. பொதுக் கூட்டத்தில் 'கலவரம் நடக்கவிருந்ததாகவும், கேள்விகளுக்குத் தோழர் நெடுஞ்செழியன் பதில் சொல்லவில்லை' என்றும் 21-12-50 'சுதேசமித்திரன்' வெளியூர் இதழில் ஒரு செய்தி வெளிவந்துள்ளது.

இந்தச் செய்தி, உண்மையில்லாதது என்பதோடு இத்தகைய மட்டரகமனப்பான்மை, 'தேசியம்' பேசுவோரிடம் வளர்வதைக்கானனருந்துகிறேன். தேசிய இதழ்களின் பித்தலாட்டம் நீடிக்காது நெடுநாள்' என்று கண்டவராயன்பட்டி சுப-சே. அழகப்பன் எழுதுகிறார்.

காஞ்சியில் சங்கம்

26—10—50 அன்று பிள்ளையார்பாளையம் கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் தோழர் செ. சிதம்பரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் குமரன் கைத்தறி நெசவுத் தொழிலாளர் சங்கம் அமைக்கப்பட்டது. தலைவர்: செ- சிதம்பரன், துணைத் தலைவர்: வ- குப்புசாமி, காரியதரிசி: த- ராஜு, துணைக்காரிய தரிசி: கோ. தாண்டவராயன், பொருளாளர்: ராபமாணிக்கம் மற்றும் இருபது பேர் நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நெசவாளருக்குப் போதிய நூல் சப்ளை செய்யவேண்டுமெனக்கோரித் தீர்மானிக்கப்பட்டது.

டில்லி மந்திரி மஹ்தாப்

டில்லி மந்திரி மஹ்தாப் வருகிறார்.

ஜனவரி 6-ந்தேதி முதல் 11ந் தேதிவரை தமிழ் நாட்டில் அவர் சுற்றுப் பயணம் நடைபெறப் போகிறது.

முன்பு டிச. 31ந்தேதி வருவதாககூறப்பட்டது.

இப்போது, அது ஒத்திவைக்கப்பட்டு, ஜனவரி 6ந்தேதி வருவதாக, நம்பத்தக்க செய்தி கிடைத்திருக்கிறது.

ஜனவரி 6—புது டெல்லியிலிருந்து விமான மூலம் சென்னை சேர்வார்.

6 முதல் 9 வரை—சென்னையிலேயே இருப்பார். அவர், 'மெட்ராஸ் இன்ஸ்டிட்டியூட் ஆப் டெக்னலஜிக்குச் செல்லலாம்.

மகாபலிபுரம் சென்றாலும் செல்லலாம்.

ஜனவரி 9—கோவைக்குப் போகிறார். அங்கு தென் இந்திய முதலாளிகள் சங்கத்தினரைச் சந்திப்பாராம்.

ஜனவரி 10 கோவையிலிருந்து திருச்சி வருகிறார்.

ஸ்ரீரங்கத்தில் நடைபெறப் போகும் காங்கிரஸ் அரசியல் மாநாட்டைத் திறந்து வைக்கலாம்.

ஜனவரி 11— திருச்சியிலிருந்து மதுரைக்குப் பயணம்.

மஹ்தாப்—சுற்றுப் பயணம் பற்றி, ஆங்காங்குள்ள கிளைக் கழகத்தினர் தகவல் பெற்றுக் கொள்ளவேண்டுகிறோம். எந்த இடத்திற்கு, எப்போது வருகிறார் என்பதை அறிந்து சட்ட வரம்புக்கு உட்பட்டு, அமைதியான முறையில் கருப்புக் கொடி காட்டுக! கண்ணியத்தோடு நமது கண்டன முழக்கம் எழும்பட்டும்! கட்டுப்பாடோடு நமது கழகத்திடம் முரசொலி கிளம்பட்டும்! வெற்றி—நமதே!

தோழர் ஏ. கே. வேலன் சுற்றுப்பயணம்

6—1—50	உட்கோட்டை (திருச்சி)
7—1—50	குற்றாலம் (தஞ்சை)
21—1—50	வேலூர்
28—1—50	திண்டிவனம்

கருத்துநிறை கலைவிழா!
திருவாரூர் திராவிட முன்னேற்றக் கழக (கிளை)
கட்டிட நிதிக்காக

7—1—51 ஞாயிறு

திருவாரூர் பேபி டாக்கீசில்

★

கலைவாணர் திரு.
என். எஸ். கிருஷ்ணன் அவர்களின்
"உத்தமர் காந்தி வரலாறு"
வில்லுப்பாட்டு
"கிந்தனர்" காலட்சேபம்

கட்டிட நிதிக்குழு திருவாரூர்.

தமிழ் நாட்டில் பட்டினிச் சாவுகள்!

நெசவாளர்களின் நிலைகெட்ட வாழ்வு

கண்ணீர் சிந்தும் காட்சிகள்

பிரேதப் பட்டியல் பெரிதாகிறது

கைத்தறி நெசவாளர்கள் படும் அவதி பற்றி நமக்கு வரும் தகவல்கள் நெஞ்சைத் தீய்க்கின்றன. வாட்டும் பசியால், பிணமாகும் காட்சி நாடெங்கும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. கொடுமையின்கோரத் தாண்டவம் கண்டும், கலங்கவில்லை, காங்கிரஸ் சர்க்கார்.

பட்டினி ஊர்வலங்கள், அதிருப்திக் கூட்டங்கள், நேரடி நடவடிக்கை முடிவுகள்—என நெசவாளரின் 'எரிமலை' வெடிக்கத் துவங்கிவிட்டது. இருந்தும் விவேகம் பிறக்கவில்லை சர்க்காருக்கு! விளையாட்டுப் போட்டியிலும், கேளிக்கைக் காட்சிகளிலும் ஈடுபட்டிருக்கிறார்கள்.

மனிதர்கள் மாள்கிறார்கள்—கதையல்ல, நாம் சொல்வது. தமிழ் நாட்டு மண், தனது தனயர்களை, மூடிக் கொண்டேயிருக்கிறது—தினசரி.

நெஞ்சு கொதிக்கும் செய்தி—நினைவைக் கொந்தளிக்கச் செய்யும் தகவல். அவைகளில் சில, இதோ:

பரிதாபத்தோடு வெளியிடுகிறோம், பரம்பரை பரம்பரை, உடை நெய்து வாழவும் வழியில்லாது, பாடையிலேறும் காலம் வந்ததே என்ற கலக்கத்தோடு!

செய்திகளைப் பார்க்கவும் கண் கூசுகிறது—எழுதவும் பேனா ஓடவில்லை.

எனினும், 'இந்நாட்டை ஆளும் மந்திரிமார்களின் திருப்பார்வைக்குப் படாதா?' என்ற ஏக்கத்தோடு, இவைகளை வைக்கிறோம்.

சங்கரநயினார் கோவில் நெசவாளர் ஊர்வலம்

சங்கரநயினார் கோவில் (நெல்லை) கைத்தறி நெசவுத் தொழிலாளர் சங்கச் சார்பில் மாபெரும் 'கருப்புக் கொடி ஊர்வலம்' 12—10—50 அன்று நடைபெற்றது.

தோழர்கள் அ. நாராயணன், பா. சங்கரசுப்பு, டி. ஆர். சுப்பிரமணியம் (திராவிட முன்னேற்றக் கழக செயலாளர்) அ. பிரமுத்து ஆகியோர் மேற்படி ஊர்வலத்தைத் தலைமை தாங்கி நடத்தினர்.

கைத்தறி நெசவாளர் சங்கடம் கண்டும் கவலை காட்டாது இருக்கும் சர்க்காரின்மீது தங்களுக்குள்ள அதிருப்தியைக் காட்டும் வகையிலேயே மேற்படி கருப்புக்கொடி ஊர்வலம் நடைபெற்றது.

ஊர்வலத்துக்குப் பின் தோழர் அ. நாராயணன் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் தி. லெட்சுமணன், டி. ஆர். சுப்பிரமணியம், சீனுவாசன் பேசினர்.

போதிய நூல் சப்ளை தர இச்சர்க்கார் தயங்கினால் நேரடி நடவடிக்கை எடுக்கப்படுமென தீர்மானிக்கப்பட்டது.

சித்தையன் கோட்டை

திண்டுக்கல்தாலுகாவைச் சேர்ந்த சித்தையன் கோட்டையில் 11—12—50 அன்று கருப்பத்தேவர் என்ற நெசவாளி மாண்டார்.

அவரது சொந்த ஊர் கோனகாட்டுப்பட்டி. வயது முப்பதுகூட முடியாத வாலிபப் பருவம்! 22 வயதுள்ள அங்கம்மாள் என்ற இளம் மனைவி அழுது கதற, 2 வயதுள்ள சிறு மகன் 'அப்பா, அப்பா' என்று அழைக்கவும் தெரியாது அலற 11-12-50 திங்கள் கிழமை காலை 8-15 மணிக்கு, மாண்டார். 'ஏ, காங்கிரசாட்சியே! உனது வருகையால் எங்கள் வாழ்வில் வளம் ஏற்படுமென எண்ணிக்கிடந்தேன். ஆனால் இதோ உனது ஆட்சி என்னை இறப்புலகுக்கு அனுப்புகிறது. நான் சாகிறேன்! உன் எதிரிலேயே சாகிறேன்!!' என்று உரைப்பதுபோல, சித்தையன்கோட்டை காங்கிரஸ் அலுவலகத்துக்கு முன் அவர் உயிர் போயிற்று.

தான் அணைத்து மகிழ்ந்த அருமை நாயகனின் பிணத்தைக் கண்டு அவர் மனைவி கண்ணீர் வடித்த காட்சியும், 'ஐயா! 'அவர்' போய்ட்டாருங்க. அடக்கம் செய்யணுங்க' என்று பஸ் நிலையத்தில், பிண அடக்கத்துக்கு, பிச்சைகேட்ட காட்சியும்,—கல் மனதையும் உருக வைக்கும்.

உயிர் போன பின்புகூட அந்த ஏழைக்கு 'பிச்சை'தான் தேவைப்பட்டது.

'பிணம்' ஆன பின்புகூட பிச்சையெடுக்காமல், முடியவில்லை!

கொடுமையான சம்பவம். குருதி வடிக்கவேண்டிய நிகழ்ச்சி.

உடம்பைக்குலுக்கும் இச்செய்தி அறிந்த திராவிட இயக்கத்தோழர்கள் பணஉதவியாலும், பஞ்சாயத்து போர்டாரின் ஒத்தாசையாலும் 'பிரேதம்' அடக்கம் செய்யப்பட்டது.

பிரேதம்!—வாழவேண்டிய கருப்பத்தேவர் பிரேதமானார், இளமை ததும்பும் அங்கம்மாள் விதவையானார், சிசு 'தந்தை'யில்லாததாயிற்று!

தரணி போற்ற வாழ்ந்த தண்டமிழ்நாடே! மூவரும்—உனதுமக்கள் அவர்களுக்கு இக்கதி. ஏன்? ஏன், இந்நிலை?

எட்டயபுரம்

"தனியொருவனுக்கு உணவில்லையெனில்ஜகத்தினை அழித்திடுவோம்" என்று வீரமுழக்கமிட்ட பாரதியின் ஊரிலே 'பசி! பசி!!' என்று பரதவித்துக்கொண்டே, பலர் செத்துக் கொண்டுள்ளனராம். இது தகவல் பெற்று அதிகாரிகள்கூட விசாரித்துச்சென்றனராம். பிரேதவிசாரணை நடைபெற்றதே தவிர— வாழ்வுக்கான வழி கிடைக்கவில்லையாம். 10—12—50ல் கூட இ. முத்து முதலியார் என்ற நெசவாளி, பசிக்கொடுமை தாளாது 'பாரதபுத்திரர்' ஆட்சியில், 'பாவிகளே! பசிக்கச் சோறு. புசிக்க ஒருபிடி அன்னங்கூட இல்லையே' என்று கூக்குரலிடவும் சக்தியின்றி பிரேதமாகினாராம்! இதை நெசவாளர் சங்கத் துணைச் செயலாளர் மு. சந்தனம், வேதனையோடு எழுதுகிறார்.

சேலம் கண்டிராத காட்சி

17—12—50 அன்று சேலம் கைத்தறி நெசவாளர்கள் பூரண 'அர்த்தால்' செய்தனர். அன்று மாலை தோழர் ஆர். பி. நடராசன் தலைமையில் ஆண்பெண், குழந்தைகள் உள்பட 25000க்கு மேற்பட்ட நெசவாளிகள் மாபெரும் ஊர்வலமாகச்சென்றனர். மார்க்கெட் மைதானத்தில் சேலம் இதுவரை காணாத அளவில் 40,000 பேர் அடங்கிய பொதுக்கூட்டம் தோழர் கே. கே. பூர்ணையா தலைமையில் நடைபெற்றது.

திராவிட முன்னேற்றக்கழககாரிய கமிட்டி அங்கத்தினரான தோழர் ஏ. சித்தையன் கைத்தறி நெசவாளர்கள் அவதியையும் சர்க்காரின் அசிரத்தையையும் விளக்கிப்பேசினார்.

கைத்தறி நெசவாளர் கஷ்டம் போக்க பல்வேறு கட்சியினரும் கொண்ட நடவடிக்கைக் கமிட்டி ஒன்றும் நிறுவப்பட்டிருக்கிறது.

கீழே இருக்கும் படம், நெசவாளர் உள்ளக்குமுறலோடு 17-12-50 சென்ற ஊர்வலக் காட்சியில் ஒரு பகுதி.

திருக்குறள் மாநாடு

திருவண்ணாமலையில் கட்சிப் பற்றற்ற திருக்குறள் மாநாடு பெரிய அளவில் நடத்த ஏற்பாடாகிறது. அதற்காகவரவேற்புக்குழு கூட்டம் 7—1—51 காலை 10 மணிக்கு திருவண்ணாமலை நகராண்மைக் கழக ஆண்கள் உயர்நிலைப் பள்ளி கட்டிடத்தில் நடைபெறும். அன்பர்கள் வந்திருந்து ஆலோசனைக் கூற வேண்டுகிறேன்.

ப. உ. சண்முகம்,
அமைப்பாளர்



★ சேலம் மார்க்கெட் மைதானத்தருகே பட்டினி ஊர்வலம் ★

சங்கரநயினார் கோவில்

இந்நகர் 6-வது வார்டு (நெ-250) வீட்டில் வசித்துவந்த சுப்பையா முதலியார் 6—12—50 பிணமானார் நெசவுத்தொழில் செய்து வாழ்க்கை நடத்திவந்த அவர் மாண்டார். தற்கொலை செய்துகொண்டு மாண்டார்!

பசிக்கொடுமை தாளாது, பிச்சைக்காரராகிப் பல இடங்களில் திரிந்தும் பட்டினி போக்க வழி தெரியாததால், தற்கொலை செய்துகொண்டு பிணமானார்!

பிரேத விசாரணை நடத்தி — தற்கொலையென்று பதிவு செய்துள்ளனர் அதிகாரிகள்.

பிரேத ஊர்வலம்—கைத்தறி நெசவாளர் சங்கச் சார்பில் நடைபெற்றது.

கொடுமையான இந்நிலை குறித்து ஊரில் பரபரப்பும், பதைப்பும் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது என தி. மு. க. செயலாளர் டி. ஆர். சுப்பிரமணியம்வேதனையோடு அறிவிக்கிறார்.

7-ம் பக்கத் தொடர்ச்சி

இராபர்ட் வில்லியம், இரத்தினம், ஆதிமூலம், இன்பதாசன், பார்த்தசாரதி, கோபாலகிருட்டிணன், சின்னதுரை, 'போர்வாள்' இளஞ்செழியன், பி. ஏ. (ஆனர்ஸ்) பேசினர்.

கம்பத்தில் 10—12—50ல் நடந்த கூட்டத்தில் புதிய செயற்குழு அமைக்கப்பட்டது. செயலாளர்கள்:- நிலந்தரு, இளங்கோவன். உதவிச் செயலாளர்:- பொன்னையா, விளம்பர உறுப்பினர்:— மொக்கச்சாமி, பொருள் உறுப்பினர்:— ராஜூ மற்றும் நால்வர் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டது. கூட்டம் நடந்து கொண்டிருக்கும்பொழுது, போலீசார் நுழைந்து, பலவந்தமாகக் கூட்டத்தைக் கலைத்தனர். பிறகு போலீசார், தங்கள் தவறையுணர்ந்து தோழர்களை விடுத்துச் சென்றனர். கூட்டம் தொடர்ந்து நடந்து, இனிது முடிந்தது.

மாரண்ட அள்ளியில் 11-12-50ல் நடந்த தி. மு. க செயற்குழு கூட்டத்தில் ஜனவரி 10-ம் நாளுக்குள் துவக்க விழா நடத்துவதெனவும், அதற்கு தோழர்கள் சித்தையன், சிற்றரசு, கருணாநிதி, நெடுஞ்செழியன் ஆகியோரை வரவழைப்பதெனவும் சேலம் மாநாட்டை உடன் நடத்த ஆவன செய்யவேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

புளியங்குடியில் 11—12—50ல் தோழர் சுப்பிரமணியம் தலைமையில் நடந்த தி. மு. க. துவக்கவிழா கூட்டத்தில் தோழர்கள் திராவிடமணி, எம். எஸ். இராமசாமி பேசினர்.

மேல்பட்டம்பாக்கத்தில் 11-12-50ல் தோழர் தியாகராசன் தலைமையில் நடந்த கூட்டத்தில் தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., கோ. பாண்டுரங்கன், சி. இளவழகன் பேசினர். தோழர் இராசகோபாலன் நன்றி கூறினார்.

கல்லிடைக் குறிச்சியில் 11—12—50ல் தோழர் டாக்டர் சுப்பிரமணியம் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர்கள் இரா. சு. தங்கப்பழம், ஈ. வே. கி. சம்பத் பேசினர். கைத்தறி நெசவாளர் படுந்துயர்களைய வேண்டியது பற்றியும், தோழர் அரசு அவர்கள் மறைவு பற்றியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கீழப்பாவூரில் 12—12—50ல் தோழர் வெங்கடாசலம் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர்கள் நடராசன், திராவிடமணி, எம். எஸ். இராமசாமி பேசினர்.

தோழர்கள் சுற்றுப் பிரயாணம்

டிச. 3, 4, 5 ஆகிய நாட்களில் சங்கரநயினார் கோவில் வட்டத்தில் தோழர்கள் எம். எஸ். இராமசாமி, டி. ஆர். சுப்பிரமணியம், திராவிடமணி சுற்றுப்பிரயாணம் செய்தனர்.

நாரணபுரத்தில் 3—12—50ல் தோழர் சுப்பிரமணியம் தலைமையில் நடந்த தி. மு. க. துவக்குவிழா கூட்டத்தில் தோழர்கள் இராசேந்திரன், ஆ. திராவிடமணி, எம். எஸ். இராமசாமி பேசினர்.

சங்கரநயினார் கோவிலில் 4—12—50ல் தி. மு. மா. கழகத் துவக்கு விழா கூட்டம் தோழர் சுப்பிரமணியம் தலைமையில் நடந்தது. தோழர்கள் இராசேந்திரன், திராவிடமணி, நூத்துக்குடி, இரா. சு. தங்கப்பழம், எம். எஸ். இராமசாமி பேசினர்.

கடையநல்லூரில் 5—12—50ல் தோழர் சுப்பிரமணியம் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர்கள் செயலழகன், முகம்மது அலி, திராவிடமணி, எம். எஸ். இராமசாமி பேசினர்.

நெசவாளிமக்களின் துயர் துடைப்போம்

அறப்போர் வீரருக்கு பாராட்டு

'உணவுதா—இன்றேல், வெளியேபோ'

மாவட்ட பிரச்சாரப் படை கிளம்பும்

சமூக நீதியை சாய்க்காதீர்

செங்கற்பட்டு மாநாட்டின் தீர்மானங்கள்

காஞ்சியில் கூடிய, செ. மா. தி. மு. க முதல் மாநாட்டில் தலைவர் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானங்கள்:—

1. தமிழ்க் கடல் மறைமலையடிகள், காஞ்சிபுரம் கந்தசாமியார், பேராசிரியர் இராமசாமி, சர்தார் பட்டேல், பெர்னாட்ஷா, திருப்பத்தூர் நகர சபைத் தலைவர் சுப்பிரமணியம், ஆகியோரின் மறைவு குறித்து இம்மாநாடு தன் ஆழ்ந்த துக்கத்தையும் அனுதாபத்தையும் தெரிவிக்கிறது.

2. மூன்றாவது உலகப்போருக்கான அறிகுறிகள் தென்படுவதைக் கண்டு கவலையுறுவதுடன் அது தவிர்க்கப்பட வேண்டுமென்று இம்மாநாடு கருதுகிறது.

(அ) உலக சமாதானம் தழைப்பதற்கான வழிவகைகளைக் கண்டு அதற்கேற்ற முயற்சிகளை செய்வதில் இந்திய சர்க்கார் தயங்கக்கூடாதெனவும் இம்மாநாடு வலியுறுத்துகிறது.

3. நமது சென்னை மாகாணத்தில் பெருவாரியாக நூல் தயாராகியும் பஞ்சு வாங்குவது முதல் நூல் விநியோகம் வரையுள்ள முழு உரிமையையும், அதிகாரத்தையும் இந்திய மத்திய ஆட்சி தன் ஆதிக்கத்தில் வைத்துக்கொண்டு, சென்னை மாகாணத்தின் முக்கியமான தொழிலான கைத்தறி நெசவுத் தொழிலைப் பற்றி கவலையின்றியும் வடநாட்டுமில் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், வெளிநாட்டு நாணய செலாவணியை நோக்கமாகவும் கொண்டு, சென்னை மாகாணத்தில் உற்பத்தியாகும் நூலை தங்கள் விருப்பம் போல் எதேச்சாதிகாரமாக எடுத்துக் கொண்டு போவதால், சென்னை மாகாண கைத்தறி நெசவாளிகள் நூல் கிடைக்காமல், கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கை மிக மிக, மோசமான கட்டத்தை அடைந்துள்ளபடியால், சென்னை அரசாங்கம் உடனடியாக சென்னை மாகாண நூல் உற்பத்தி விநியோகம் சம்பந்தமான பூரண பொறுப்பையும் ஏற்றுக் கொண்டாலொழிய நிலைமையை சமாளிப்பது சாத்தியமில்லையென்று இம்மாநாடு சென்னை அரசியலாருக்கு அறிவுறுத்துவதுடன் உடனடியாக இப்பிரச்சினையை கவனிக்கும்படி அரசியலாளரை வற்புறுத்துகிறது.

4. உணவுப் பஞ்சம் நாட்டின் நானா பகுதிகளிலும் தலைவிரித்தாடுவதைக் கண்டு கவலைப்படுவதோடு, அதை தீர்க்கும் எல்லாவித ஏற்பாடுகளிலும் தங்களது ஒத்துழைப்பை அளிக்கத் தயாராக இருப்பதாக இம்மாநாடு ஆளவந்தாருக்குத் தெரிவித்துக் கொள்கிறது,

(அ) சென்னை மாகாண சர்க்கார், மக்களின் தவிப்பைப் பன்முறை எடுத்துச் சொல்லியும், கவனிக்காது புறக்கணிக்கும் இந்திய சர்க்காரின் போக்கை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

(ஆ) மக்களின் ஜீவாதாரமான உணவு விஷயத்தில் நிரந்தரமான கொள்கையில்லாமல் நடக்கும் போராபத்தைத் தருமென்று இந்திய ஆட்சிக்கு இம்மாநாடு எச்சரிக்கை செய்கின்றது.

5. பொதுவாக திராவிட சமுதாயத்துக்கும், சிறப்பாக பிற்படுத்தப்பட்ட வகுப்பினரது நல்வாழ்வுக்கும் காரணமாய் விளங்கி வந்த வகுப்புவாரி உரிமை முறையானது, இன்றைய புதிய இந்திய அரசியல சட்டத்தின் துணையினால் செல்லத்தக்கதல்ல வென்றாக்கிவிட்டார்கள். மாகாண ஆட்சியாளர்கள், இந்த சமூக நீதியை உயிர்ப்பிக்க, "சுப்ரீம் கோர்ட்" வரை சென்றுள்ள நன்முயற்சியை இம்மாநாடு பாராட்டுவதோடு, அங்கேயும் நீதி கிடைக்கவில்லையென்றால், இந்திய அரசியல் அமைப்பையே நிருத்திடவும் தயங்கக் கூடாது என்று மாகாண அரசியலாரை இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

6. பிராமணாள் அல்லது வேறு சாதிப் பெயர்களைத் தாங்கியுள்ளதும், பேத உணர்ச்சியைப் பெருக்குவதுமான அறிவிப்பு பலகைகளை நீக்காத ஓட்டல்களுக்கு நகராட்சி மன்றத்தார் "லைசன்ஸ்" கொடுக்கக் கூடாது என்று இம்மாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

(ஆ) இப்பொழுது உள்ள விளம்பரம் பலகைகளில் உள்ள சாதிப் பெயர்களை உடனே நீக்க உத்திரவு பிறப்பிக்கவும் மறுப்பவர்களுக்கு லைசென்ஸ் ரத்து செய்யவும் தயங்கக் கூடாது. இனி புதிதாக வைப்பவர்களுக்கு இதனை வலியுறுத்தியே அனுமதியளிக்கவேண்டுமென கேட்டுக் கொள்ளுகிறது.

(7) பொதுவாக மக்களின் பேச்சுரிமை, எழுத்துரிமை ஆகியவைகளைப் பறிக்கும் வகையில் அரசியலார் விதித்துவரும் தடையுத்திரவுகளை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

(அ) பேச்சுரிமை, எழுத்துரிமை ஆகியவைகளுக்கும் குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகப் பிரசாரத்திற்கும் தடை விதிக்கும் வகையில் அரசியலார் வீணான தங்களது அடக்குமுறைகளைக் கையாண்டு வருவதை கண்டிக்கும் முறையிலும், கோவில்பட்டியில் கூடிய தி. மு. க. செயற்குழு தீர்மானத்தின்படியும் 24—10—50ல் சென்னை வந்திருந்த ஆச்சாரியாருக்கு கருப்புக் கொடி காட்டியபோது போலீசாரால் தடியடி பட்டு துன்பத்திற்காளான தோழர்களையும் சிறை சென்ற தோழர்களையும், குன்றத்தூரில்பேச்சுரிமையை நிலைநாட்ட 144 தடையுத்திரவை எதிர்த்து, ஆளவந்தாரின் கடுமையான துப்பாக்கிப் பிரயோகம், ஊரடங்கு சட்டம் ஆகிய கொடுமைகளுக்கு ஆளாகி தொண்டு புரிந்த தோழர்களையும் இம்மாநாடு மிக மிகப் பாராட்டுகிறது.

(ஆ) அதே போன்று திருச்சி மாவட்டம், நாரணமங்கலத்தில் 144 தடையுத்திரவை துச்சமாக மதித்து கடுங்காவல் தண்டனையடைந்து திருச்சி சிறையிலிருக்கும் கழக வீரர்களையும் இம்மாநாடு பாராட்டுகின்றது.

(இ) அரசியலார் மேலும் மேலும் தங்களது அடக்குமுறை ஆணவத்தை இவ்விதமே கையாண்டு வருவார்களேயானால், செயற்குழு தீர்மானத்திற்கேற்ப தடையுத்திரவுகளை எதிர்த்து பொதுவாக மனித உரிமையை நிலைநாட்ட செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள தி. மு. க. கிளைகள் உறுதியுடனிருந்து பணியாற்றுமென இம்மாநாட்டின் மூலம் உறுதி கூறுகிறது.

9. செங்கற்பட்டு மாவட்டத்துக்கு நீர்ப்பாசன வசதி, நல்ல முறையில் கிடைக்கும் திட்டங்களைத் தீட்டவேண்டுமென்று சர்க்காரை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

(அ) மேற்படி நீர்ப்பாசன வசதி சம்பந்தமாக, பல்லாண்டுகளுக்கு முன்னதாகவே போடப்பட்ட பாலாறு அணைக்கட்டு திட்டத்தை இது நாள் வரை நிறைவேற்றாமல் காலதாமதம் செய்து வரும் சர்க்கார் போக்கு கண்டு இம்மாநாடு மிக மிக வருந்துவதோடு உடனடியாக நிறைவேற்றித் தருமாறு வேண்டிக்கொள்கிறது.

10 தென்னிந்தியாவில் உள்ள மக்கள் பெருவாரியான அளவில் வேலையில்லா திண்டாட்டத்தில் ஈடுபட்டிருக்கும் இவ்வேளையில் அகதிகள் என்ற பெயரால் வடநாட்டினருக்கு 11000 பேருக்கு தென்னிந்திய ரயில்வேக்களில் வேலை கொடுத்திருக்கும் இந்திய சர்க்காரின் போக்கை இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன் உடனடியாக அகதிகளை தென்னிந்தியாவில் இறக்குமதி செய்யும் போக்கை நிறுத்தாவிடில் இம்மாகாண பொருளாதார நிலைக்கும் அமைதிக்கும் குந்தகம் நேரிடலாமென இந்திய அரசியலாருக்கும் சென்னை அரசியலாருக்கும் இமமாநாடு எச்சரிக்கை செய்கின்றது.

11. செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள சிற்றூர்களிலும், நகரங்களிலும் தி. மு. க. பிரசாரங்களை நடத்த பிரசாரப் படையொன்று மாவட்டக் கழக சார்பில் ஏற்படுத்துவதென இம்மாநாடு தீர்மானிப்பதுடன் அந்த அமைப்பை ஏற்படுத்த மாவட்டக் குழு செயலாளர் சி. வி. எம். அண்ணாமலை அவர்களை கேட்டுக்கொள்ளுகிறது.

(அ) பொதுஸ்தாபனமாக இருந்து பணியாற்ற வேண்டிய அகில இந்திய வானொலி நிலையம் காங்கிரஸ் ஆட்சி ஏற்பட்டது முதல் அவர்களுடைய பிரச்சார நிலையமாக இருந்து வருவதோடு, எதிர்க்கட்சிகளின் செய்திகளுக்கோ கருத்துகளுக்கோ மதிப்பு தராமல் நடந்து வருவதோடு மூடநம்பிக்கையை வளர்க்கும் வைதீகப் பிரச்சாரம் செய்து வரும் போக்கை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

நன்றி

குடந்தை 30—10—50 அன்று தோழர் S K. சாமி தலைமையில் வாழ்க்கையொப்பந்தம் செய்து கொண்டபோது, எங்களை வாழ்த்தியும், பரிசுகள் அனுப்பிவைத்த அன்பர்களுக்கு எங்கள் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலப்பாதி T. P. ஆறுமுகம்
(A) M. அவயாம்பாள்.

கழகச் செய்திகள்

எட்டயபுரத்தில் 13—11—50ல் நடந்த உறுப்பினர் கூட்டத்தில் தோழர் மா. குருசாமி தலைமைவகித்தார். தோழர்கள் கலிங்கன், இராமசாமி, மற்றும் டலர் பேசினர்.

மேலூரில் 23—11—50 தோழர் எம். அய்யாச்சாமி தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர்கள் காஞ்சி. கல்யாணசுந்தரம், மாணவர் வசனப்பித்தன், நெடுஞ்சேரலாதன், பாலகிருஷ்ணன், அண்ணாதாசன், காதர்மைதீன் பேசினர் இவ்வூரிலும், உச்சரிச்சான்பட்டியிலும் நடந்த கூட்டங்களுக்கு மொத்த வசூல் ரூபா 71—6—0. செலவு ரூபா 65-2-6. மிகுதி ரூ 6-3-6.

சின்னையாபுரத்தில் 24-11-50ல் தோழர் மா. செந்தூரான் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர்கள் தம்பித்துரை, சிதம்பர பாண்டியன் பேசினர்.

ஆரணியில் 25-11-50ல் தோழர் கண்ணையன் தலைமையில் கூடிய செயற்குழு கூட்டத்தில், தோழர் சம்பத் வந்த கூட்டத்திற்கு வசூல் ரூ. 98—6—0 செலவு ரூ. 85-4-6 ஆக இருப்பு ரூ. 13-1-6ம் பொருளாளரிடம் ஒப்புவிக்கப்பட்டது மேலும் நான்கு செயற்குழுவினர் சேர்த்துக்கொள்ளப்பட்டது. செயற்குழுவினரின் ஆண்டு சந்தா ரூ. 1 என்றும் தீர்மானிக்கப்பட்டது.

ஒரகாட்பேட்டையில் 25-11-50ல் கூடிய செயற்குழுக் கூட்டத்தில் புதிய செயற்குழு தெரிந்தெடுக்கப்பட்டது. செயலாளர்:- சண்முகம், துணைச் செயலாளர்:- வேணு, விளம்பர உறுப்பினர்:— கணபதி, செயற்குழுவினர்:- துரைசாமி, கண்ணன், முத்து, போரூரான்.

திருச்செங்கோட்டில் 26-11-50ல் தாலுக்கா தி. மு. க. உறுப்பினர் கூட்டம் தோழர் என்-கே. பி. வேல் தலைமையில் நடந்தது. குள்ளம்பட்டி இராமலிங்கம் எல்லோரையும் வரவேற்றார். தலைவர் உரைக்குப்பின் திருச்செங்கோடு வட்ட தி. மு. க. அமைக்கப்பட்டது. செயலாளர்:— குள்ளம்பட்டி இராமலிங்கம், துணைச் செயலாளர்:- இடைப்பாடி அருணகிரி, பொருள் உறுப்பினர்:- திருச்செங்கோடு செங்கோடன், செயற்குழுவினர்:- சண்முகசுந்தரம், ராஜகோபால், என். ரகுராமன், முனியப்பன், வையாபுரி, தாண்டவன், வரதராசன். பிறகு பலதீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இடைக்காட்டூரில் 26—11-50ல் நடந்த தி. மு. க. பொதுக்கூட்டத்தில் தோழர் சங்கரன் கொடியேற்றினார். தோழர்கள் யாக்கூப்கான், அன்பில் அபூபக்கர் நாட்டுப்பண்பாடினர் தோழர் முத்துராமலிங்கம் வரவேற்றார். தோழர் சந்திரசேகரன், பி.ஏ., பி.எல்., தலைமை வகித்தார். தோழர்கள் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ. காஞ்சி கல்யாணசுந்தரம், எம். எஸ். இராமசாமி, எம். அய்யாச்சாமி பேசினர்.

பொட்டனேரியில் 27-11-50ல் தோழர் ஏ. சித்தையன் தலைமையில் நடந்த கூட்டத்தில் தோழர் கோபி ஜி. என்- ராசு பேசினர். புதிய செயற்குழு அமைக்கப்பட்டது. செயலாளர்:— கே. எஸ். மாணிக்கம், உதவிச் செயலாளர்:— வேலாயுதம், பொருள் உறுப்பினர்:- இராமசாமி, மற்றைய செயற்குழுவினர்:- சுப்பிரமணி, சுந்தரராசு, பொன்னுசாமி, ராஜாசாமி, சண் ... [illegible] ...ன்.

வத்தலகுண்டில் 28—11—50ல் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர் முத்து தலைமை வகித்தார். தோழர் காஞ்சி கல்யாணசுந்தரம் பேசினர்.

ஆலங்குடியில் 29—11—50ல் நடந்த செயற்குழு கூட்டத்தில் புதிதாக அழகிரி வாசகசாலை திறக்கப்பட்டது. திருச்சி மாவட்டம் நாரணமங்கலத்தில் 144 தடையுத்தரவை வன்மையாகக் கண்டிக்கப்பட்டது.

மேட்டுப்பாளையத்தில் 30-11-50ல் தோழர் மா. இராமநாதன் தலைமையில் கூடிய செயற்குழு கூட்டத்தில் தோழர் இராமலிங்கம் துணைவியார் வெள்ளையம்மாள் மறைவு குறித்து அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

இராமனுதபுரத்தில் (முகவை, 30-11-50ல் தோழர் எம. எஸ். இராமசாமி தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர் ஈ-வெ கி- சம்பத்பேசினர்.

வையம்பட்டியில் 2—12—50ல் நடந்த தி. மு. க. பொதுக்கூட்டத்தில் தோழர் ஏ. கே. வேலன் பேசினர்.

வாலாஜாபேட்டையில் 2-12-50ல் தோழர் கா. அப்பாதுரையார் எம். ஏ., எல். டி., தலைமையில் நடந்தகூட்டத்தில் தோழர்கள் அன்பெழிலன், என். வி. நடராசன், ஆர்க்காடு, ஆர். நடராசன் பேசினர்.

அரியநாயகபுரத்தில் 3—12-50ல் தோழர் மாரியப்பன் தலைமையில் நடந்த கூட்டத்தில் தோழர்கள் அருணாசலம், தங்கச்சாமி, இராமசாமி, பேசினர். பெர்னார்ட்ஷா மறைவிற்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

கோவை மேற்கு வட்டத்தில் 3—12—50ல் தோழர் கிருஷ்ணன் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர்கள் தண்டபாணி, செழியன், இராசமாணிக்கம், இளங்கோ பேசினர். தொண்டர்படையொன்று நிறுவத் தீர்மானிக்கப்பட்டது.

திண்டிவனத்தில் 3—12—50ல் புதிய செயற்குழு அமைக்கப்பட்டது. செயலாளர்:— தங்கவேலு, துணைச் செயலாளர்:- பாலகிருட்டிணன், பொருள் உறுப்பினர்:— பாண்டுரங்கன், விளம்பர உறுப்பினர்:- பூபாலன், மற்றையோர்:- நடராசன், துளசிங்கம், குப்புசாமி, ஆறுமுகம், கந்தசாமி, ஏழுமலை, எல்லப்பன்.

குன்னூரில் 3-12-50ல் தோழர் ப. முத்து தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் சிறுமி சுசிலா நாட்டுப்பண் பாடிட தோழர்கள் சுப்பராயன், என்-வி- நடராசன் பேசினர்.

கமுதியில் 4—12—50ல் தோழர் காமாட்சி தலைமையில் கூடிய கூட்டத்தில் புதிய செயற்குழு அமைக்கப்பட்டது செயலாளர்:- சௌந்திர பாண்டியன், மற்றும் ஏழுவர் செயற்குழுவினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

வடசென்னையில் 4—12—50-ல் தோழர் பாண்டியன் தலைமையில் நடந்த கூட்டத்தில் தோழர்கள் மாரியப்பன், தங்கவேல், சேர்மன் முனுசாமி, தனபாலன், ஆறுமுகம், முத்தையா, மணி, பி-எம்-மணி, அரசு ஆகியோர் பல தீர்மானங்கள் கொண்டுவந்து பேசினர்.

திருவேங்கடபுரத்தில் 5-12-50ல் தோழர் தமிழரசன் தலைமையில் நடந்த கூட்டத்தில் புதிய செயற்குழு தெரிந்தெடுக்கப்பட்டது. செயலாளர்:— தமிழரசன், துணைச் செயலாளர்:- சங்கையா, பொருள் உறுப்பினர்:— சின்னையசாமி, விளம்பர உறுப்பினர்:— சண்முகம். மற்றையோர்:— கணபதி, பெருமாள்சாமி, சண்முகம், சங்கரலிங்கம், இராமசாமி, பெருமாள்சாமி, நடராசன்.

கூடலூரில் (மதுரை) 5-12-50ல் தோழர் பரமன் தலைமையில் கூடி, இரண்டாமாண்டிற்கான செயற்குழு அமைக்கப்பட்டது. செயலாளர்:— அழகு, துணைச் செயலாளர்:- சாமி, விளம்பர உறுப்பினர்:— இராமசுவாமி, பொருள் உறுப்பினர்:— பகவதிராசு, அமைப்பாளர்:- பரமன், எட்டுபேரடங்கிய செயற்குழுவினர் அமைக்கப்பட்டது.

வாட்டாகுடியில் 5—12—50ல் நடந்த செயற்குழு கூட்டத்தில் தஞ்சை மாவட்ட மாநாடு விரைவில் கூட்டவும், பொதுக்கூட்டம் நடத்த தஞ்சையில் சுற்றுப் பிரயாணம் செய்யப்போகும் பிரசாரகர்களை அழைப்பிதெனவும், இன்னும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தென்காசியில் 6—12—50ல் தோழர் திராவிடமணி தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர்கள் கொள்கை அரசு, ரஜப்மீரான், மக்தும், எம். எஸ். இராமசாமி பேசினர். முடிவில் நாரணமங்கலத்தில் தடையை மீறிச் சிறை சென்ற தோழர்களைப் பாராட்டித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

புளியங்குடியில் 7—12—50ல் தோழர் வாசுதேவநல்லூர் சுப்பிரமணியம் தலைமையில் நடந்த உறுப்பினர் கூட்டத்தில் தோழர்கள் இரத்தினம், என். எம். கிருஷ்ணன், திராவிடமணி பேசினர். தோழர் மருதக்கன்னி இன்னிசை விருந்தளித்தார். பாண்டியன் நன்றி கூறினார்.

தேவபாண்டலத்தில் 8-12-50ல் தோழர் டி. பி. கேசவன் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர்கள் ஆசைப்பிள்ளை, ஈ. வே. கி. சம்பத் பேசினர்.

சித்தையன் கோட்டையில் 9—12—50ல் நடந்த செயற்குழுவினர் கூட்டத்தில் புதிய நிர்வாக செயற்குழு அமைக்கப்பட்டது. செயலாளர்:- காச்சியப்பன், துணைச் செயலாளர்:- முத்து, பொருள் உறுப்பினர்கள்:- திவாகராசன், அப்துல் காதர். விளம்பர உறுப்பினர்:- எஸ். வெங்கடாசலம், மாவட்ட பிரதிநிதிகள்:- காச்சியப்பன், முகம்மது காசிம். மேலும் எட்டு பேர்கள் செயற்குழு உறுப்பினர்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

திருவனந்தபுரத்தில் 10-12-50ல் நடந்த செயற்குழுகூட்டத்தில் புதிய செயற்குழு அமைக்கப்பட்டது. பொதுச் செயலாளர்:— எம். நல்லசிவம், துணைச் செயலாளர்:- கே. பி. செல்லம், விளம்பர உறுப்பினர்:- டி. என். மணி, பொருள் உறுப்பினர்:- எம். சிவராசு, மற்றைய செயற்குழுவினர்:- மணி, அரசு, கிருட்டிணகுட்டி, கேசவன், கிருஷ்ணன் மாவட்ட பிரதிநிதிகள்:- டி. எம். சுவாமி, பி. சங்கர்.

திருவண்ணாமலையில் 10-12-50ல் நடந்த செயற்குழு கூட்டத்தில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. 'ஓர் இரவு' நாடகம் ஒன்று நடத்தி கட்டிட நிதிக்காக ரூ 1000, பொதுச் செயலாளர் திருவண்ணாமலை வரும்பொழுது அளிப்பதென முடிவு செய்யப்பட்டது.

ஆம்பூரில் 10—12—50ல் புதிய நிர்வாகிகள் தெரிந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்:- கண்ணன், துணைச் செயலாளர்:- கோ. அரசு, பொருள் உறுப்பினர்:- கோவிந்தன், விளம்பர உறுப்பினர்:- எம். துரை, துணை விளம்பர உறுப்பினர்:- கதிர்வேல் மற்றைய செயற்குழுவினர்:- சுப்பிரமணி, சுந்தரராசு, பொன்னுசாமி, ராஜா, சாமி, சண்முகம், கணேசன்.

கோலார்தங்கவயலில் 10-12-50ல் தோழர் சபாபதி தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர்கள்

(6-ம் பக்கம் பார்க்க)

திராவிடப் பண்ணை

தரும்

தேன்சுவை நூல்கள்!

வெளிவந்துவிட்டன!

இலட்சிய விளக்கம் தரும்
இரு கருத்து மலர்கள்!

(1) அவர்கள் சந்திப்பு ★
[அண்ணா — இந்தி நல்லெண்ணத் தூதுக் குழு விபரம். விரிவான முறையில்]

(2) இதயகீதம் ★
['திராவிடநாடு' துணை ஆசிரியர் அரங்கண்ணல் தீட்டிய இலட்சிய முரசு]

அடுத்து வருபவை:

(1) இருளும் ஒளியும் ★
[தில்லை—வில்லாளன் B A. (Hons) தீட்டிய புதுமைச் சித்திரம்—அரிய நாவல், சிந்தனைக் காவியம் — சிறிய முயற்சி]

(2) விஷப் புயல் ★
[அரங்கண்ணல், தரும் அறிவு விருந்து. கொடுமைகளால் கூத்தாடி, வீழ்ந்து, ஒழிந்த சர்வாதிகாரியின் விஷச் சரிதம்.]

(Ad) திராவிடப் பண்ணை தெப்பக்குளம் திருச்சி

டில்லி மந்திரி மஹ்தாப் வருகிறார்!

நாடெங்கும், காட்டுவோம் கருப்புக் கொடி!!

நம்மைத் தவித்திடச் செய்யும் வடநாட்டு மந்திரி **மஹ்தாப்** நாயினும் கேடாய் நடத்தும் டில்லி 'பிம்பம்'

பசியால் சாகிறோம்—பதைக்கவில்லை டில்லி சர்க்கார்!
வகுப்புரிமை கேட்டோம்—வதைக்கின்றனர், சூழ்ச்சியால்!
உரிமை கோருகிறோம்—துப்பாக்கியால் சுடுகிறார்கள்!
துடிக்கிறோம்! தவிக்கிறோம்! துயரால் மடிகிறோம்!!

ஆகவே

கழக மாவீரரே—காட்டுங்கள் கருப்புக் கொடி!

சுற்றுப் பயணம்

ஜன	6	சென்னை
,,	7	சென்னை
,,	8	சென்னை
,,	9	கோவை
,,	10	திருச்சி
,,	11	மதுரை

நல்ல சந்தர்ப்பம்—அரிய வாய்ப்பு.
'நாம் யார்' என்பதைக் காட்ட,
நமது உரிமை நாதத்தைக் கூற,
நமது சக்தியை வெளிப்படுத்த,
வீரப் பரம்பரையென்பதை உணர்த்த,

எல்லோரும் காட்டுங்கள், கருப்புக் கொடி!

"முன்னேற்றம்"

இலங்கைவாழ் திராவிட மக்களின் எழுச்சிபற்றிக் கேள்விப்படும்போதெல்லாம், நமது இதயம் களிப்பால் 'கானடமில்' ஆவதுண்டு. வீழ்ச்சியுற்ற திராவிட சமுதாயத்தின் மலர்ச்சிக்குரல், கேளாமலிருக்க முடியாது. இலங்கையில் வெற்றிச்சிந்து பாடி நிற்கும் நமது திராவிட முன்னேற்றக் கழகவீரர்களின் இதய முரசாக 'முன்னேற்றம்' என்ற கருத்திதழ் வெளிவரத் துவங்கியிருக்கிறது. புரட்சிக் கருத்துக்கள்! புதுமைக் குவியல்கள்! வீர முரசொலிகள் தாங்கி, பவனி வரத் துவங்கியிருக்கும் முன்னேற்றத்துக்கு நமது வாழ்த்துக்கள். முன்னேற்றப் பாதையில், வெகுவேகமுடன் செல்லும் நமது இளம் வீரர்களுக்கு நமது அன்பு. 'முன்னேற்றம்' மூடநம்பிக்கையெனும் முகிலைக் கிழித்து, முழுநிலவுபோல, எப்போதும் பவனி வரவேண்டும். இதற்கான ஒத்துழைப்பை, இலங்கைவாழ் மக்கள் அளிப்பார்கள் என்பதில் நமக்கு அசையாத நம்பிக்கையுண்டு. அதைப்பயன்படுத்திக்கொள்ளுமாறு இலங்கையிலிருந்து முரசொலிக்கும் 'முன்னேற்றத்' தோழர்களைக் கேட்டுக்கொள்கிறோம். வளர்க முன்னேற்றம்!

"சூறாவளி"
(திங்கள் வெளியீடு)
சிறந்த கட்டுரைகள்! கவிதைகள்! கதைகள்!
சமுதாய வழுக்கு நிலத்தைச் சீர்திருத்தப் புகுந்துள்ள சிறந்த திங்கள் வெளியீடு.
விலை அணா நான்கு
விபரங்களுக்கு:
தமிழர் பாசறை
துடியலூர் கோவை. Ad.

பெயர் மாற்றம்
கோயமுத்தூரில் சிறப்புப் பெற்று ஓங்கி வளர்ந்து வரும்
இந்தியா லைப் பெனிபிட் அஷ்யூரன்ஸ் சொசைடி, லிமிடெட்
இந்தியா லைப் அண்டு ஜெனரல் அஷ்யூரன்ஸ் சொசைடி, லிமிடெட்.
என்று பெயர் மாறுதல் அடைந்திருப்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.
ஸ்ரீ T. A. ராமலிங்கம் செட்டியார், B. A., B. L., M. P. சேர்மேன்.
ஸ்ரீ. M. S. பழனியப்ப முதலியார், B. A., மானேஜிங் டைரெக்டர்.
(Ad) ஸ்ரீ C. R. சிவசுப்ரமண்யம், B. A., செக்ரெடரி.

வருந்துகின்றோம்

திருப்பத்தூர் நகர சபைத் தலைவர் தோழர் சி எம் சுப்பிரமணியம் 23—12—50 சனிக்கிழமை காலை 6-மணிக்கு இயற்கை எய்தினார் என்ற செய்தியை நம் செவிகள் ஏற்க மறுத்தன இதயமோ, இச்செய்தியை சுமக்க முடியாது தவித்தது!

ஆம், அவர் மறைவு நம்மால் தாங்க முடியாத ஒன்றுதான்.

திராவிட இயக்கத்திற்கு, ஏறத்தாழ இருபது ஆண்டுகளாகவே பேருதவிகள் பல புரிந்துள்ளார். மற்ற இயக்க நற்காரியங்களுக்கும் அவர் உதவி செய்ய பின்வாங்கியதில்லை அவர் நகரத் தந்தை மட்டுமல்ல—வடார்காடு மாவட்டத்திற்கே பெரும் பிதா என்று கூறலாம்.

அவரைப் பிரிந்து ஆறாத்துயரில் ஆழ்ந்து கிடக்கும் அவரது குடும்பத்தாருக்கும், மற்றவர்க்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

—x—

சேலம் மாவட்ட, தி. மு. க. செயற்குழு

10—12—50ல் சேலம் மாவட்டச் செயற்குழு கூட்டம் செவ்வாய்ப்பேட்டை கழக கட்டிடத்தில், தோழர் ஜி. பி. சோமசுந்தரம் தலைமையில் நடந்தது. சேலம் கல்லூரித் தலைவர் இராமசாமி, மறைமலையடிகள், பெர்னாட்ஷா மறைவிற்கு வருந்தம் தெரிவித்தும், சென்னை, குன்றத்தூர் கொடுமைகளைக் கண்டித்தும், நாரணமங்கலம் தடையை மீறிய தோழர்களைப் பாராட்டியும், சேலம் மாவட்ட மாநாட்டை நடத்துவது பற்றி ஆலோசனை செய்து அடுத்த 31—12—50ல் முடிவு செய்வதெனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. தோழர் சித்தையன் நன்றி கூறினார்.

ஜனவரி 28
பெரிய குளத்தில்
(மதுரை)
சமூக உரிமை நீதி மாநாடு

தமிழகம் வாணிபத் துறையில் முன்னேற தமிழர் ஆதரவு தந்து ஊக்குவிக்க வேண்டும்!
உயர்ந்த சரக்கு! சிறந்த தயாரிப்பு!!
லோட்டஸ் காப்பி
தமிழகத்தின் தலைநகரில் தனிச் சிறப்புடன் திகழ்கிறது.
என்று எல்லோரும் கூறுகிறார்கள்.
* சென்னை S. I. A. A பார்க் பேர். எக்சிபிஷனில் எங்கள் (நெ, 287–288) ஸ்டாலுக்கு அனைவரும் தவறாமல் வருகைதந்து ஆதரவு கொடுங்கள்.
பி. ராமசாமி உரிமையாளர்.
"லோட்டஸ் காப்பி ஒர்க்ஸ்"
சென்னை—21
(Ad)

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at Dravida Nadu" Press 95, Tirukkachinambi Street Kancheepuram